**எஸ்.டி.சி.எண். 2685/2023 நாள்- 14.03.2024 பக்கம் /2023**

**அ.சா .1 பால்சாமி , த/பெ.பழனியப்பன்**

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1) சுந்தர்ராஜன் என்பவர் எனக்கு எதிரி வருவதை எனக்கு நேரடியாக சொன்னாரா அல்லது போன் மூலம் சொன்னாரா என்றால் போன் மூலம் சொன்னார். அவருடைய போன் எண் என்ன என்று தெரியுமா என்றால்,போன் நெம்பர் தெரியும், தற்போது ஞாபகம் இல்லை. சுந்தர்ராஜனும் அங்கு வந்திருந்தாரா என்றால் வரவில்லை. செந்தில்குமார் வீட்டில் வேறு யார் யார் இருந்தார்கள் என்றால், அவர் மட்டும்தான் இருந்தார்.

2) கடந்த 04.09.2019-ம் தேதி எதிரி எனக்கு புரோநோட் கொடுத்ததாக சொல்லப்படுவது எங்கு வைத்து கொடுத்தார் என்றால் ஜே.எஸ்.டியூசன் சென்டரில் வைத்து கொடுத்தார். புரோநோட் கொடுக்கும் சமயத்தில் அங்கு யார் இருந்தார்கள் என்றால் செந்தில்குமார் இருந்தார். டியூசன் சென்டரில் சுந்தர்ராஜன் இருந்தாரா என்றால் இல்லை. சுந்தர்ராஜனின் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன், முகவரி தெரியுமா என்றால் தெரியாது. சுந்தர்ராஜன் வீடு எங்கு உள்ளது என்றால், கரூர் ஆலமரத்து தெருவில் உள்ளது.

3) சுந்தர்ராஜனின் குடும்ப உறுப்பினர்கள் எனக்கு பழக்கமா என்றால் இல்லை. சுந்தர்ராஜனின் மனைவியும் தனியார் பள்ளி ஆசிரியர் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியாது என்று மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. செந்தில்குமார் வீட்டிற்கு எத்தனை முறை சென்றிருப்பேன் என்றால் 2 முறை சென்றிருப்பேன். செந்தில்குமார் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால், 2 மாதமாக பழக்கம். அவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் பைனான்ஸ் கொடுக்கல், வாங்கல் செய்யும் வேலை செய்து வருகிறார்.

4) மேற்படி தொழிலை எங்கு வைத்து செய்கிறார் என்றால் எனக்குத் தெரியாது. செந்தில்குமாருடன் சேர்ந்து பைனான்ஸ் தொழிலை நான் எத்தனை வருடமாக

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

செய்து வந்தேன் என்றால், 2 மாதமாக செய்து வந்தேன். எதிரியைத் தவிர வேறு யாருக்காவது கடன் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பைனான்ஸ் தொழில்செய்வதற்கு முறையாக அனுமதி பெறவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் கொடுத்ததாக சொல்லும் தொகைக்கு ஏதேனும் அனுமதி பெற்றேனா என்றால், இல்லை, நான் கொடுத்த தொகை குறைவான ரூ.500 மற்றும் 1000/- தொகை என்பதால் நான் எந்த அனுமதியும் வாங்கவில்லை.

5) இவ்வழக்கின் புரோநோட்டை யார் வாங்கி வந்தார்கள் என்றால், எதிரியே வரும்போது வாங்கி வந்தார். காசோலையானது நிரப்பப்பட்டுள்ள கையெழுத்து யாருடையது என்றால் என்னுடையது ஆகும். காசோலையை எங்கு வைத்து எழுதினேன் என்றால் செந்தில் வீட்டில் வைத்து எழுதினேன். புரோநோட்டை எங்கு வைத்து எழுதினேன் என்றால் செந்தில் வீட்டில் வைத்து எழுதினேன். புரோநோட்டில் உள்ள வாசகங்களை எழுதியாது யார் என்றால் செந்தில் ஆவார்.

6) புரோநோட்டும், காசோலையும் ஒரே தேதியில் எழுதப்பட்டதா என்றால் வெவ்வேறு தேதியில் எழுதப்பட்டது. எதிரி கொடுத்த பதில் அறிவிப்பினை நான் முழுவதுமாக படித்துப் பார்த்தேனா என்றால், படித்துப் பார்த்தேன், தற்போது ஞாபகம் இல்லை. 14.07.2020-ம் தேதி எதிரியின் பதில் அறிவிப்பில் 4ம் பக்கத்தில் சுந்தர்ராஜன் அறிமுகம் செய்து வைத்த மணி (எ) பாலதண்டாயுதம் என்பவரிடம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த விவரத்தை பற்றி சுந்தர்ராஜனிடம் கேட்டேனா என்றால் மணி என்பவர் யார் என்றே தெரியாது. சுந்தர்ராஜனிடம் கேட்டேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) என் குடும்பத்தில் நான் தான் சம்பாதிக்கும் நபர் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகவில்லை. எனது மகளை டியூசன் சென்டரில் சேர்த்ததாக சொல்வது யார் என்றால் எனது வளர்ப்பு மகள் ஆவார். எதிரி எனக்கு யார் என்றே தெரியாது என்றாலும், எதிரியை நான் ஒரு முறை கூட நேரிலோ, போனிலோ பேசியது கிடையாது என்றும், சுந்தர்ராஜன் எனது நண்பர் என்பதால் சுந்தர்ராஜனுக்கும், எதிரிக்கும் உள்ள பிரச்சனை காரணமாக என் மூலம் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சுந்தர்ராஜன் எதிரிக்கு கடன் வாங்கித்தருவதாக ஏமாற்றியுள்ளார் என்றாலும், நான் அதற்கு உறுதுணையாக இருந்தேன் என்றாலும் சரியல்ல.

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

8) ஜே.எஸ். டியூசன் சென்டர் என்பதில் ஜே.சுந்தர்ராஜன் என்பதைத்தான் குறிக்கும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 9843039652 மற்றும் 9944939652 என்ற இரண்டு எண்களும் சுந்தர்ராஜனின் போன் எண் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு எல்லா விவரங்களும் தெரியும் என்றாலும், தெரிந்து கொண்டே நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சுந்தர்ராஜனும், பாலதண்டாயுதபாணியும், நானும் கூட்டு சேர்ந்து ஏதோ காரணங்களுக்காக சுந்தர்ராஜனுக்கு சாதகமாக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சுந்தர்ராஜன் மூலமாகத்தான் எதிரி எனக்கு பழக்கம் என்று சொல்லப்பட்டுள்ள சுந்தர்ராஜனை எனது தரப்பில் நீதிமன்றத்தில் சாட்சியாக அழைத்து விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக இல்லை. மேற்படி சுந்தர்ராஜனை அழைத்து விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவரை அழைக்க தயாராக இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரி தரப்பில் பொய்யான மறு அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்

**எஸ்.டி.சி.எண். 2685/2023 நாள்- 14.03.2024 பக்கம் /2023**

**அ.சா .2 செந்தில்குமார், த/பெ.முத்துப்பிள்ளை**

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன வேலைசெய்து வருகிறேன் என்றால் பைனான்சில் டெய்லி கலெக்சன் செய்து வருகிறேன். பைனான்ஸ் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் அலுவலகம் இல்லை. பொதுவாக பைனான்ஸ் தொழில் செய்வதற்கு அனுமதி வாங்கவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது பைனான்சை நான் பதிவு செய்யவில்லை. புகார்தாரரை எவ்வளவு நாட்களாகத் தெரியும் என்றால் 3 முதல் 4 மாதங்களாக தெரியும்.

2) இவ்வழக்கு புரோநோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ஜே.எஸ்.டியூசன் சென்டரில் வைத்து எழுதப்பட்டது. ஜே.எஸ். டியூசன் சென்டர் நடத்தி வரும் சுந்தர்ராஜனை எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியும், ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவோம். புகார்தாரரை யார் மூலம் எனக்கு பழக்கம் என்றால் பணம் கொடுக்கல், வாங்கல் மூலமாக பழக்கம் ஆனார். என்னிடம் அவர் பணம் வாங்குவாரா என்றால் அவ்வப்போது ரூ.10,000/-, ரூ.5000/- கடன் வாங்குவார் அதன் மூலம் பழக்கமானார். மேற்படி தொகையை வரவு வைத்தேனா என்றால் தெரிந்தவர் என்பதால் கைமாற்றாகக்கொடுத்தேன். அதனால் வரவு வைக்கவில்லை.

3) இவ்வழக்கு புரோநோட் எழுதும்போது சுந்தர்ராஜன் என்பவர் இருந்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரியை எனக்குத் தெரியுமா என்றால் புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது தெரியும். எதிரியை நான் எத்தனை முறை சந்தித்துள்ளேன் என்றால் பணம் கொடுக்கும்போதும், அதன் பிறகு ஒரு முறையும் பார்த்தேன். 2 வது முறை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து பார்த்தேன். எனது வீட்டில் யார் யார் உள்ளோம் என்றால், நான் மட்டும்தான் உள்ளேன். நான் குடியிருக்கும் வீடானது சொந்த வீடா வாடகை வீடா என்றால்சொந்த வீடாகும்.

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

4) இவ்வழக்கு புரோநோட் தவிர வேறு யாருக்காவது புரோநோட் எழுதிக் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. சுந்தர்ராஜனின் போன் எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதிக வருடமாக என்னிடம் தொடர்பில் தான் உள்ளார். சுந்தர்ராஜன் எனது ஒரே சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் அவரிடம் நல்ல பழக்க வழக்கத்தில் இருந்ததால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரி எனது வீட்டிற்கு வந்ததாக கூறுவதும், நான் புரோநோட் எழுதியதாக கூறுவதும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**Sd/–R.Sujatha**
நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்